| Article Date | Headline / Summary | Publication |
| --- | --- | --- |
| 16 Jan 2026 | சீனியர் சிட்டிசன்களுக்கு மருத்துவக் காப் பீடு... இந்த விஷயங்களை எல்லாம் கட்டாயம் கவனியுங்கள்..! | Vikatan |

## சீனியர் சிட்டிசன்களுக்கு மருத்துவக் காப்பீடு... இந்த விஷயங்களை எல்லாம் கட்டாயம் கவனியுங்கள்..!



வயது அதிகரிக்கும்போது, மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் செலவுகளுக்கு மட்டும் இழப்பீடு வழங்கும் காப்பீடு திட்டம் போதுமானதல்ல.

அமர்நாத் சக்சேனா, வணிகத் துறை - முதன்மை தொழில்நுட்ப அதிகாரி, பஜாஜ் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடெட்

இன்றைய காலத்தில் மருத்துவச் செலவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக, முதியவர்களுக்கு மருத்துவத்துக்கான தேவைகள் அதிகம். அதற்கு, சிறந்த மருத்துவக் காப்பீடு மிகவும் அவசியம்.

முதியவர்களுக்கு தனி காப்பீடு...

வயது அதிகரிக்கும்போது பல்வேறு உடல் நலப் பிரச்னைகள் ஏற்படுவதால், குடும்ப மருத்துவக் காப்பீட்டை (Family Health Insurance) விட, முதியவர்களுக்காக தனியாக (Standalone) எடுக்கப்படும் மருத்துவக் காப்பீடு சிறந்ததாக இருக்கும். குடும்ப பாலிசியில் வயதில் மூத்தவர்களை சேர்க்கும்போது, அவர்களின் அதிக வயதின் அடிப்படையில் மருத்துவக் காப்பீட்டுக்கான பிரீமியம் நிர்ணயம் செய்யப்படும். இது பாலிசியின் பிரீமியத்தை மிகவும் அதிகரித்துவிடும். இதனால், அவர்களுக்கு தனி பாலிசி எடுப்பது புத்திசாலித்தனம் மற்றும் லாபகரமானது.

வயதில் மூத்தவர்களுக்கு, அவர் களுக்கு ஏற்ற மருத்துவக் காப்பீட்டைத் தேர்வு செய்வது முக்கியம். வயதானவர் களுக்கு நீரிழிவு பாதிப்பு, இதய பாதிப்பு இருந்தால் அதற்கான பிரத்யேக பாலிசியை எடுத்துக்கொள்வது நல்லது.

எந்த வகை மருத்துவக் காப்பீடு...?

வயது அதிகரிக்கும்போது, மருத்துவ மனையில் அனுமதிக்கப்படும் செலவு களுக்கு மட்டும் இழப்பீடு வழங்கும் காப்பீடு திட்டம் போதுமானதல்ல. அதனால், தற்போது காப்பீட்டு நிறுவனங்கள் முதியவர்களுக்காக கூடுதல் கவரேஜ் உடன் கூடிய திட்டங்களை வழங்கி வருகின்றன.

அதில் மிக முக்கியமானது, கிரிட்டிக்கல் இல்னஸ் (Critical Illness) கவர். வயதானவர்களுக்குப் புற்றுநோய், இதய நோய், பக்கவாதம், நீரிழிவு, சிறுநீரகக் கோளாறு போன்ற கடுமையான நோய்கள் வரும் வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன.இந்தக் கூடுதல் கவரேஜ் இருந்தால், இப்படிப்பட்ட நோய்கள் கண்டறியப் பட்டவுடன் ஒருமுறை பெரிய தொகை வழங்கப்படும். அந்தப் பணத்தை சிகிச்சை மற்றும் பிற தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

மருத்துவக் காப்பீட்டில் டொமிசிலியரி ஹாஸ்பிடலைசேஷன் (Domiciliary Hospitalisation) என்ற வசதியும் முக்கியமானது. சில நேரங்களில் மருத்துவ மனையில் படுக்கை இல்லாமலோ அல்லது மருத்துவர் வீட்டிலேயே சிகிச்சை செய்யச் சொன்னாலோ, வீட்டிலேயே மருத்துவமனை போல சிகிச்சை அளிக்க வேண்டி வரும். இப்படிப்பட்ட சிகிச்சை குறைந்தது மூன்று நாள்கள் நடந்தால், அதன் செலவுகளையும் காப்பீடு பாலிசி மூலம் பெறலாம்.

மிகவும் வயதான நிலையில் அல்லது உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்ல இயலாத நிலையில், வீட்டிலிருந்தே சிகிச்சை எடுத்துகொள்ளும் வசதி மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

மேலும், கன்சியூமபிள்ஸ் கவர் (Consumables Cover) மற்றும் வெளிநோயாளர் சிகிச்சை கவர் (OPD Cover) போன்ற கூடுதல் வசதிகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

மருத்துவமனையில் நீண்ட நாள்கள் தங்கி சிகிச்சை எடுத்தால், ஊசி, கையுறைகள், முக கவசம் போன்ற சிறிய மருத்துவப் பொருள்களுக்கே அதிக செலவு ஆகும். இந்தச் செலவுகளை கன்சியூமபிள்ஸ் கவர் ஈடு செய்யும். ஓ.பி.டி கவர் இருந்தால், மருத்துவர் ஆலோசனைகள், பரிசோதனைகள், எக்ஸ்ரே, மருந்துகள் போன்ற தினசரி மருத்துவச் செலவுகளையும் காப்பீடு நிறுவனம் ஏற்றுக்கொள்ளும். இதனால், நோய் பாதிப்பு பெரிதாக அதிகரிப்பதற்கு முன்பே சிகிச்சை பெற முடியும்.

இப்போது சில காப்பீட்டு நிறுவனங்கள், நோயாளி கீழே விழுந்துவிட்டதை விரைவாகக் கண்டறியும் (Fall Detection) தொழில்நுட்ப வசதியையும் வழங்குகின்றன. இதற்கான ஸ்மார்ட் வாட்ச் மூலம் முதியவர்கள் கீழே விழுந்துவிட்டால் உடனே குடும்பத்தினர், மருத்துவ சேவை மையம் மற்றும் மருத்துவர்களுக்கு தகவல் அனுப்பப்படும்.

இதன் மூலம் இதயத் துடிப்பு, உடல் வெப்பநிலை, ஆக்சிஜன் அளவு போன்றவை உடனே கண்காணிக்கப் பட்டு, தேவையான நேரத்தில் அவசர மற்றும் அவசிய மருத்துவ உதவி கிடைக்கும். பல நேரங்களில் இந்த வசதி மூலம் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கிறது.

முதியவர்களுக்கான மருத்துவக் காப்பீடு எடுக்க இது சரியான நேரம்... ஏன்?

சமீபத்தில் இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (Insurance Regulatory and Development Authority of India - IRDAI) சில முக்கிய மாற்றங்களை மருத்துவக் காப்பீட்டில் கொண்டு வந்துள்ளது. இதனால், முதியவர்களுக்கு மருத்துவக் காப்பீடு வாங்குவது எளிதாகியுள்ளது.

முன்பு 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் காப்பீட்டு பிரீமியம் ஒரே ஆண்டில் 40% முதல் 100% வரை உயர்ந்துவிடும். இப்போது அந்த உயர்வு அதிகபட்சம் 10% என்ற அளவுக்கு கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

இதற்கு முன் அதிகபட்சம் 65 வயது வரைக்கும்தான் மருத்துவக் காப்பீடு பாலிசி எடுக்க முடியும். இனி மருத்துவக் காப்பீடு வாங்க உச்ச வயது வரம்பு இல்லை. அதனால் எந்த வயதிலும் முதியவர்கள் காப்பீடு எடுக்கலாம்.

தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் மருத்துவக் காப்பீட்டு பாலிசிக்கு பிரீமியம் கட்டி வந்தால், ஏற்கெனவே இருந்த நோய் பாதிப்பு விவரங்களை முன்னரே சொல்லவில்லை என்ற காரணத்துக்காக இனி இழப்பீட்டை நிராகரிக்க முடியாது (மோசடி இல்லாத வரை). பல வருடங்களுக்கு முன் செய்த சிகிச்சைகளை மறந்து விட்ட முதியவர்களுக்கு இது பெரிய நிம்மதியாக இருக்கும்.

மேலும், அண்மையில் மருத்துவக் காப்பீட்டுக்கு விதிக்கப்பட்டிருந்த 18% சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) நீக்கப்பட்டுள்ளது. இதனால், பிரீமிய செலவு கணிசமாகக் குறைந்து, காப்பீடு இன்னும் மலிவாகியுள்ளது. பிரீமியம் குறைந்துள்ளதால் கவரேஜ் தொகையை அதிகரித்துக்கொள்ளலாம் அல்லது தேவையான ஏதாவது துணை பாலிசியை கூடுதலாக எடுத்துக் கொள்ளலாம்.

வயது அதிகரிக்கும்போது மருத்துவத் தேவைகள் சிக்கலானதாக மாறுகின்றன. அதனால், வெறும் மருத்துவமனைச் செலவுகளை மட்டும் அல்லாமல், கிரிட்டிக்கல் இல்னஸ், வீட்டிலேயே சிகிச்சை, வெளிநோயாளர் செலவுகள் மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகளையும் கொண்ட முழுமையான மருத்துவக் காப்பீடு அவசியமாகிறது.

இன்றைய சாதகமான விதிமுறைகள் மற்றும் குறைந்த பிரீமிய செலவு காரணமாக, முதியவர்களுக்கான மருத்துவக் காப்பீடு வாங்க இது சிறந்த நேரம். இது அவர்களுக்கும், அவர்களைப் பராமரிக்கும் குடும்பத்தினருக்கும் மன நிம்மதியை வழங்கும்.